மணி வரையில் மீண்டும் பேச்சு வார்த்தை நடந்தது. நான் இந்தக் கோரிக்கைகளை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தினேன். ஐ.என்.டி.யூ.சி. தலைவர்களில் ஒருவரான திரு. பழனியாண்டி அவர்களை அழைத்து ஒத்துக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இன்று மாலை 3 மணிக்கு மீண்டும் சந்திப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். பேச்சு வார்த்தை தொடர்ந்து நடந்துகொண்டு இருக்கிறது.

(இ) டன்லப் தொழிற்சாலையில் கலவரம் குறித்து.

திரு. ர. ஜெபமணி : சபாநாயகரவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். 22-ம தேதி இரவு டன்லப் தொழிற்சாலையில் பயங்கரமான ஒரு பெரிய கலவரம் நடந்து, இரண்டு தொழிலாளர்கள் பயங்கரமாகத் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியிலே இருக்கிறார்கள். அதிலிருந்து டன்லப் தொழிற்சாலை மூடிக் கிடக்கிறது. இது தொழிலாளர் பிரச்சினை மட்டுமல்ல, தொழிலாளர்களின் மனைவிமார்கள், எப்பொழுது புருஷன் வருவான், எப்பொழுது புருஷன் வருவான் என்று கேட்கும் அளவிற்குத் தொழிலாளர்கள் தாக்கப்படுகிறார்கள். பத்திரிகையிலும் இந்தச் செய்திகள் வரவில்லை. அரசுக்கும் இது தெரியவில்லை. இதைப்பற்றி நான் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். தாங்கள் அதை எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்தது என்னுடைய கவனத்தில் இருக்கிறது. சம்பந்தப்பட்ட அமைச்சரைக் கேட்டு, அதற்கு தயாராக இருக்கும் நேரத்தில் எடுத்துக் கொள்கிறேன.

[முற்பகல் 10-20]

(ஈ) உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெறும் கடிதங்களின் உறையும் தமிழில் அச்சடிக்கப்பெற்றிருத்தல் வேண்டும் என்பது குறித்து

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, நான் இரண்டு நாளைக்கு முன்னால் இந்த அவையிலே தமிழிலேதான் எல்லாம் கொடுக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தினேன். நீங்களும் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிவித்தீர்கள். வினாக்கள் பட்டியல் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கிறது, மகிழ்ச்சிதான். இருந்தாலும் அந்தப் பார்வையிலே மாறுதல் கிடையாது. அந்தப் பார்வையிலே மாறுதல் இல்லாதவரை, தமிழை நாம் ஆட்சி மொழியாகக் கொண்டு வருகிறோம் என்பதில் பொருள் இல்லை. எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கூடு ஆங்கிலத்திலே கொடுக்